3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2024 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் “ஆம்” என்க. (ஆம்)
மறுப்போர் “இல்லை” என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2024 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2024) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.